**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம் , நான்குநேரி**

**வழக்கு எண்:SC- 62/2024**

**வழக்கு சாட்சி:PW - 3**

பெயர்: ஆறுமுகம் | தேதி : 06.03.2025

தந்தை பெயர்: தனுஷ்கோடி | தொழில்:

கிராமம்: | சமயம்:

தாலுக்கா: | வயது:

(எதிரி ஆஜர்).

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 06.03.2025.

**முதல் விசாரணை**

நான் தேவநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் பொன்கணபதி சாமில்லில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 05.03.2013 ம் தேதி மதியம் சுமார் 1 மணியளவில் நானும் மாடசாமி ஆசாரி மகன் சண்முகம் என்பவரும் பொன் கணபதி சாமில்லில் முன்புற காம்பவுண்டில் சம்பவ இடத்தில் நான்குநேரி மகளிர் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தையும், அதன் சுற்று புறங்களையும் எங்கள் இருவர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அதில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் இட்டோம் என்றும் என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். முதலாவது கையொப்பம் சண்முகம் என்பவரது கையொப்பம்தான். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதற்கு பின்பு அன்றைய தினம் மதியம் சுமார் 1.30 மணியளவில் நானும் சண்முகம் என்பவரும் ராஜாராம் என்பவருக்கு சொந்தமான பொன் கணபதி சாமில் காம்பவுண்ட் சுவருக்கு

முன்புறம் எங்கள் இருவர் முன்னிலையில் உடைந்த ஹாலோபிளாக் சிமெண்ட் கல் ஒன்றை அத்தாட்சி பிறப்பித்து காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். 1 வது கையொப்பம் சண்முகம் என்பவருடையது. அந்த அத்தாட்சி அ.சா.ஆ.3 ஆகும். நீதிமன்றத்தில் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள உடைந்த ஹாலோபிளாக் சிமெண்ட் கல் ஒன்று இன்று என்னால் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டப்பட்டது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை** :

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.